உ

கருணாதேவியின் அருளால்

காலனை வணங்கி கணவனைக்கார்த்த கற்பின்

சாவித்திரி கும்மிச்சிந்து



சென்னை திருவொற்றியூர்,

டி. எஸ். ராமாநுஜஅய்யங்கார் அவர்களால்.

ஸ்ரீராமாநுஜம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பெற்றது.

[இரண்டாம் பதிப்பு.]

ரிஜிஸ்டர் காபிரைட்] 1925 [விலை அணா-2

நெ 39-வடவண்டைமாடவீதி சென்னை திருவொற்றியூர்

உ

காலனை வணங்கி கணவனைக் காத்த கற்பின்

சாவித்திரி கும்மிச்சிந்து

காவடிச்சிந்து, அலங்காரச்சிந்து,
இவைமூன்றும் அடங்கியிருக்கின்றன.



ம-அ-அ-ஸ்ரீ வித்வான் கவிராஜகந்தசாமி பிள்ளை,
அவர்களால் இபற்றப்பட்டு

சென்னை திருவொற்றியூர்,
ஸ்ரீ ராமாநுஜம் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப் பெற்றது.

[இரண்டாம் பதிப்பு.]

…ப்பிரைட்] 1925 [விலை அணா-2

உ

முருகன் துணை.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.



அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் காலனைவணங்கி கணவனைக்காத்த கற்பின் சாவித்திரி, காவடிச்சிந்து, கும்மிச்சிந்து, அலங்காரச்சிந்து, இவைமூன்றும் அடங்கியபுத்தகத்தை ம-ள-ள-ஸ்ரீ வித்வான் கவிராஜ கந்தசாமிபிள்ளை, அவர்களால் எழுதினதை என். கணபதிமுதலியாரிடத்தில் டி. எஸ். ராமாநுஜஅய்யங்கார்சகலசுதந்திரமும்பெற்றுக்கொண்டபடியால் இதை என்அநுமதியில்லாமல் யாவரும் அச்சிடலாகாதென கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டபடிக்கு ரிஜிஸ்டர் செய்திருப்பதை யாருகிலும் அச்சிடுவாராகில்நான் கோரிய நஷ்டங்களை கனம்பொருந்தியகவர்ன்மெண்டார்சட்டபடிக்கு வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு

டி. எஸ். ராமாநுஜ அய்யங்

உ

வேலுமயிலூர் துணை.

—0—

காலனைவணங்கி கணவனைக்காத்த கற்பின்

சாவித்திரி காவடிச்சிந்து.

கும்மிச்சிந்து வர்ணமெட்டு.

—0—

விநாயகர்துதி வெண்பா.

தாரணியோர் கொண்டாடுஞ் சாவித்திரி சரித்திரத்தை
சீரணியுங் கதையினைச் செப்பவே—வாரணனூர்
மாட்சியுடனாளும் வழுவாத வாங்குதவி
காட்சிதருவான் களித்து.

கும்மியடிபெண்கள் கும்மியடி-உங்கள்
கொண்டை குலுங்கவே கும்மியடி
நம்மையாளுங் கந்தசாமியை
நாடி கும்மியடியுங்கடி (கு)

கலிங்கபுரத்தில் அரசாக்ஷி செய்யும்
கஜகேதுவென்கிற மன்னவனும்
பலத்தில் தளத்தில் சினத்தில் மிகுந்த
பாவியென்றெங்கும் பெயர்படைத்தோன் (கு)

தனக்குள்ளடங்கிய சிற்றரசர்களை
தண்டித்து இம்சை புரிந்திடுவான்
தனக்கு நிகரில்லையென்று கர்வித்திடும்
சண்டாள மன்னன் கஜகேது (கு)

அவனுக்கடங்கிய சிற்றரசர்களில்
அஞ்சா துயுமத்சேனராஜன்
கவனமில்லா தவ்வருட கப்பமதை
கட்டாததாலே சினமடைந்து (கு)

சேறுபதியை யருகழைத்து தயுமத்
சேனனிடம் கப்பம் கேட்பாயென்ன
கோனே யவன்மகன் சத்தியவந்தனுலே
கொடுக்கே னென்றேனைய வென்றுரைத்தான் (கு)

சத்தியவந்தன் சமர்த்தந புகலவே
தாரணியோராலே யாகாது
எத்திசைமன்னரும் அஞ்சவனுக்காளும்
எள்ளளவேனும் மனத்தளரான் (கு)

வில்லுக்கருச்சுனன் சொல்லுக்கு அரிச்சந்திரன்
விஜயபராக்கிரமசீலனையா
மல்லுக்கஞ்சாத மகனிருப்பதாலே
மாநிலத்தோர்க் கவனஞ்சானே [(கு)

சத்தியவந்தனைப்பெற்ற தயுமத்சேனன்
தந்திடேனென்றான் கப்பமதை
இத்தகு சத்தியவந்தன் புவிபுரம்
விட்டிருக்கின்று னுகையினால் (கு)

ஆனைசேனைபரிவாரத்துடனே நாம்
அதிவேகமாய் சாலவபுரியில்
சேனையுடன்சென்று யுத்தம்புரிந்து
ஜெயித்திடுவோம் தயுமத்சேனனை (கு)

அந்தகாத்தையும் கொள்ளையிட்டு அவன்
ஆனைசேனை பரிவாரங்களை
சின்னபின்னமாகச்செய்து அவன்கோட்டையில்
ஜெயக்கொடிநாட்டுவோமென்றுரைத்தான் (கு)

சொல்லிவாய்மூடு முன் பாவிகருகேத
சேனு சைன்னிய கூட்டத்துடன்
வல்லமையாகவே சாலவபுரியில்
வந்துவிட்டானவன் போர்புரிய (கு)

பேரிகை டங்கா முழங்குவதும் ரண
பேரியின் சப்த முழங்குவதும்
பேரிகைச்சலாக சண்டையின் சப்தம்
பிரவேசமாய் முழங்கினார்கள் (கு)

அச்சமயத்தில் தயுமத்சேனன்
ஆஹாவென் மந்திரிகளே யீதென்ன
இச்சமயத்தில் சண்டையின்காரணம்
சப்த ரணபேரி கேட்பதென்ன

யுத்த நிருபமுங்காணவில்லை ஒரு
யுக்தி தந்திரமுஞ் செய்யவில்லை
எத்தாக நம்மைஜெயிப்பதற்காகவே
எந்தப்பனைகவனோ வந்துவிட்டான் (து)

சேனாபதியை யழைத்திடுவீர்-நீர்
சேனைகளையெல்லாஞ் சேர்த்திடுவீர்
நானாவிதமாக பகைவர் சேனையை
நாசப்படுத்தி துரத்திடுவோம் (து)

என்றிவர் யோசனைசெய்திருக்க-அரசன்
எதிரில் சேனாபதிவந்துநின்று
மன்னன் கிருதிகேதுசண்டைக்குவந்து
வளைத்துக்கொண்டானையா கோட்டைதனை (து)

சத்தியவந்தனை தானழைக்க-ஒரு
உத்தமதூதனை நீரனுப்பி
இத்ததிவந்திட செய்குவீராயில்
சத்துருக்களை யதஞ்செய்வோம் (து)

என்றுசேனாபதி தானுரைக்க-அங்கு
எதிரிலிருந்த சுமாலி தனை
அன்றேமணிபுரந் தானனுப்பி-சத்ய
வந்தந்தனை யழைத்து வந்திடென்றான் (து)

அமரதுசெய்திட்டார் இருபடைவீரரும்
அதிவீரமாகவே மூன்றுநாளாய்
எமதூதர்கள்போலவே கருகேதுசேனைகள்
எல்லோரையும் வென்றார் தீரமுடன் (து)

சேனைகளெல்லாம் ஜெயமடைய-கெஜ
கேதும்சினமாய் கோட்டையேகி
தானே துயுமத்சேனன் பத்மாக்ஷியை
தவறாமல் கைப்பற்றி வாருமென்றான் (து)

மன்னனுரைத்த மொழிப்படியே-பொல்லா
மாவீரர்சென்று இருவரையும்
துன்மனதாகப் பிணைத்துக்கட்டிபந்த
துன்மார்கன்முன்னே கொண்டுவந்தான் (து)

மன்னன் துயுமத்சேனனும் பத்மாக்ஷி
மனதுமெலிந்துசினமுடனே
அநீதஞ்செய்தாயே பாவிகெஜகேது
அரசர்க்கடுக்காத துன்பஞ்செய்தாய் (து)

யுத்தநிருபம் அனுப்பாமல்-ஒரு
யோசனை என்னிடம் கேட்காமல்
சத்தியவந்தனு மில்லாதவேளையில்
சண்டைக்குவந்தாயே மாபாவி (கு)

சண்டைசெய்துநகர் கைகொண்டாலும்-இந்த
சதிமோசஞ்செய்யலாமோ மாபாவி
பண்டையரசர்களிவ்விதஞ் செய்தாரோ
பகருவாய்துர்குண மாபாவி (கு)

கட்டினகட்டையவிழ்த்துவிடு-நாங்கள்
கானகமேரி பிழைத்திடுவோம்
வெட்டினாலும் ரெண்டுதுண்டாகவெட்டிடு
வேதனைசெய்யாதடா துரோகி (கு)

என்றிவர்சொல்லி யழுதிடும்வேளையில்
எள்ளளவேனும் மனமிரங்கா
நன்றியறியா கடுகேதுவீரனை
நாற்புறந்தன்னிலுந்தானிருத்தி (கு)

மன்னன்துயுமத்சேனனுடன்-அவன்
மனைவிபத்மாக்ஷி தன்னையுமே
அன்னிதமாகவே காட்டிற்கொண்டுவந்து
அனியாய தண்டனைசெய்யலுற்றான் (கு)

திருப்புகழ்-சந்தம்.

மந்திரிசாலவ புரியரசன்திரை
தந்திடாமலே தொந்தரை செய்ததால்
இந்தவேளையிலவனுடன்போர்செய்து-வென்றேமே 1

இன்றுசாலவ புரிநமக்கானது
சென்றுகோட்டையில் நம்மிடசேனைகள்
நின்றுகாவல் புரிந்திடசெய்வாய்-திடமாக 2

சத்தியவந்தனும் வந்திடுவானகில்
யுத்தம்புரிந்தினி யவனையும்பற்றியே
இந்ததியிங்கு கொணருவீர்சிக்கிரம்-அறிவீரே 3

சிக்கிரமிவர்களின் நேத்திரமிரண்டையும்
போக்கியேபடை வீரருடன்நகர்
நோக்கியே வருவீரென புகன்றனன்மாபாவி 4

ஆக்கினைப்படி அவர்களின்கண்களை
போக்கினார்க ளவ்வேளையில் சதிபதி
பார்க்கும்விழிகளிழந்தனரையோ-பரிதாபம்

கும்மிச்சிந்து.

க்ஷாத்திரமாக கொடுமைகள்செய்த
சண்டாளனான கஜகேது
நேத்திரம் போக்கியே காட்டில்விடுத்தானே
நேமியிலிவ்வித ஞாயமாமோ (கு)

துஷ்டவரசன் சொற்கேட்டு அந்த
துரோகிகள் கண்ணை பிடுங்கிவிட்டார்
கஷ்டமாயவர்கள் துக்கித்தழுது
கானகவாசிக ளாயிருந்தார் (கு)

மன்னன்துயுமத்சேனனுடன் அந்த
மங்கை பத்மாக்ஷி யானவளும்
துன்பஞ்சகியாமல் துக்கித்தழுதிட
துரோகி கஜகேது செய்துவிட்டான் [கு]

கண்ணிழந்திவர்கள் கதறியழுதிட
காட்டில்வாழ் பக்ஷிமிருகங்களும்
என்னதுமென்னி இவர்களைப்பார்த்து
என்செய்வதென்று அழுதிடுமாம் [கு]

பறவைகளெல்லாந் துணையாச்சு அந்த
பத்மாக்ஷி துயுமத்சேனனுக்கு
உறவினர்போலே கனிவர்க்கங்கொணர்ந்து
உண்டுபசியாற செய்ததுவாம் [கு]

பத்மாக்ஷிசெய்யு் உபகாரங் கண்டு
பத்மாக்ஷி துயுமத்சேனனுந்தான்
இச்சமயத்தி லெங்களைப்பெற்றோர்கள்
இந்தப்பறவைக ளென்றுரைத்தார் [கு]

இவ்விதமாக இவர்களிருக்கையில்
ஏகிசுமாலி சத்தியவந்தனை
ஒவ்வியழைத்து வருகையிலேயிவன்
உண்மைகளொன்றுமே சொல்லவில்லை [கு]

சத்தியவந்தன் சுமாலியிருவரும்
சந்தோஷமாக வருகையிலே
மதராபுரிநந்தவனத்தைக்கண்டு
மகிழ்ந்திருந்தன்பாய் களைதெளிய [கு]

நடந்துவந்தவிடாய்தனிய இங்கு
நல்லஜலமுண்டு செய்வோமென்று
தடாகத்தைதேடிசுமாலிசென்றுவிட்டான்
சத்தியவந்தன் தனியாயிருந்தான் [கு]

சகிகளுடனே சாவித்திரிப்பெண்ணும்
சந்தோஷமாக நந்தவனந்தனில்
மகிழுடன்வந்து விளையாடும்வேளையில்
மாதன்களையால் மதிமயங்கி [கு]

காதலுடனே கீதங்கள்பாடி.
களிப்புற்றிருக்கின்ற வேளையிலே
கீதமுடன்சத்தியவந்தன் சிங்காரமாய்
நிற்பதைப்பார்த்தவள் யோசிக்கின்றாள் [கு]

எந்தநேசத்தின் மன்னவனோ இவர்
இந்திரனோசந்திரனோமன்மதனோ
சுந்தராலங்கார கந்தர்வனோ இவர்
சந்தோஷமாய்வந்து காட்சிதந்தார் [கு]

என்றுசாவித்திரி காதல்மிகுந்து
என்னதுமென்றெண்ணியே சிந்திக்கையில்
அன்றையபொழுது போக்கசத்தியவந்தன்
அவ்வனத்தை சுற்றிப்பார்த்திருந்தான் [கு]

சாவித்திரிதேவியை தான்புசிக்கவொரு
சிங்கம்வருகையிலம்மாது
கூவிதிடுக்கிட்டு ஓடிவந்தாள்
கொன்றான்சிங்கத்தை சத்தியவந்தன் [கு]

நடந்துவந்த களைதான்தெளிய அந்த
நந்தவனத்தில சயனித்திட
தொடர்ந்து சாவித்திரியொன்றுமே
தோற்றாமல் ஆலோசனை புரிந்திடலானாள் [கு]

யாரையா நீரெந்த தேசமையா நீர்
யாதொருகாரணமாக இங்குவந்தாய்
கூறையா உம்மிடபேரென்ன ஊரென்ன
குலமென்ன வென்றிவள் கேட்கலானாள் [கு]

சாவித்திரிமாது கேட்டவுடனந்த
சத்தியவானுமே சொல்லுகின்றான்
ஆவித்துணையான பெண்மணியே யானும்
அடுத்த சால்வபுரி தேசம் [கு]

நீ என்னகாரணமாக வந்தாய்பெண்ணே
நிசமாகவே சொல்லவேண்டும்
தாயின்பேர் தந்தைபேர் என்னஉந்தனுக்கு
தற்சமய மணமானதுண்டோ.

சொல்லுவா யென்றிவன் கேட்கையிலே யந்த
சொர்னவடிவுள்ள சாவித்திரி
நல்லவர் சூழும் மத்ராபுரி தேசம்
நங்கையென் பேரும் சாவித்திரி (கு)

அன்னையே மாலவி அஸ்வபதி தந்தை
ஆகவில்லை மணமென்றனுக்கு
நன்னயமாகவே சத்தியவந்தனை
நானே மணப்பதற் காசித்தேன் [கு]

சத்யவந்தனும் நான்தானே பெண்ணே
சாலவே தேசமெங்கள் நாடு
பத்மாக்ஷியென்றாய் துயுமத்சேனன் தந்தை
பக்ஷமுடன் கவனிப்பாய் நீ [கு]

அப்படியானா லுத்தமமேயாகும்
அன்புடனும் மணம்புரிய
ஒப்புக்கொள்ளுவோ மிருபேரும் இனி
யூருக்குச் செல்வோம் வருவீரே [கு]

பெற்றோரறியாமல் யான்மணஞ்செய்யேனே
பிரியசவுந்தரி யானவளே
அற்பமான நல்லக்ஷத்திரிய-குலந்தான்
அப்பாலேவந்து மணம்புரிவேன் (கு)

என்றிவன்சொல்லி சுமாலியுடனே
ஏகினான்கானக மார்க்கமாக
நன்றென்று சாவித்திரி தோழிகளுடனே
நடந்தாள் கன்யாமடந்தேடி. (கு)

கானகமார்க்கமாய் சத்தியவந்தனும்
சந்தோஷமாக வருகையிலே
வானம்புவியு மதிர்ந்திட பெற்றோர்கள்
வாய்விட்டழுவதை கேட்கலுற்றார் (கு)

ஐயா சுமாலி அதென்ன கூச்சலப்பா
அன்புடனே யெனைப்பெற்றோர்கள்
ஐயையோ கண்களிழந்தழுங்காரணம்
அறிகிலேனென்றவன் தானழுதான் (கு)

மைந்தனைப் பார்த்தவுடனே—தாய்தந்தையர்
மகனே கஜகேது இவ்விதமாய்
கொந்தரைசெய்தெங்கள் கண்ணைப்பிடுங்கியே
ந்திவிட்டானிந்த கானகத்தில் [கு]

நாடெகாமும் நானிழந்தோம்-எங்கள்
நல்லகண்களையு நாமிழந்தோம்
பாடுபடுகிறோம் கானகந்தன்னிலே
பக்ஷமாயெங்களை ஆதரிப்பாய் (கு)

என்றபடிக்காகவே ஆயுமத்சேனனு
ஏங்கியழுது சொன்னவுடன்
அன்றெகெஜ்சேதா கண்ணைப்பிடுங்கியான்
இப்பொழுதுங்கள்முன் கொண்டுவாரேன் (கு)

பதிக்குப்பதி வாங்கியான்வருவேன்-அந்த
பாதகன்தேசத்தை கொள்ளைகொள்வேன்
அழித்தவன்கோட்டையும் சேனைகளையும்
அதஞ்செய்து யானும்வருவேனென்றான் (கு)

சத்தியவந்தன் முனிவாக-அவன்
தாய்தந்தையும் பயந்திடவே
இந்தநிகஜசேதை கொன்றுவாரேனென்று
இனியில்லாக்கோபமுடனுரைத்தான் [கு]

என்னமாய்சொன்னாலும் சத்தியவந்தன்-கோபம்
எள்ளவும் தணியத்திறல்
நன்மையாயெமக்கோர்வரம் வேணுமென்றும்
நலமுடன் ஆயுமத்சேனன்கேட்டான் [கு]

என்னவரமென்று சத்தியவான்கேட்க
எங்களைவிட்டுப்பிரியாமல்
அன்புடன் ஆதரிப்பேனென்றுரைக்க
அப்பனே தந்தருளென்றுரைத்தார் (கு)

நல்லதென்று சத்தியவந்த னிருக்கையில்
நலமுடனே சாவித்திரியும்
அல்லும்பகலும் காதல்மிகுகியாய்
அலையவுற்றாள் விரகவேதனையால் [கு]

மாலவி சேடிகளாலுணர்ந்து-தன்
மணாளனுக்கப்போது தான்புகல
சாலவுபுரி சத்தியவந்தனைமணக்க
சம்மதமென்றிட்டாள் சாவித்திரியும் (கு)

நாரதரப்போது வந்திருந்தார்-அவள்
நமஸ்காரஞ்செய்தனள் சாவித்திரியும்
பட்டத்தையே தீர்க்க சுமங்கலியாகவே
பாக்கியமாயிருவென் றாசீர்வதித்தார்

சாவித்திரி இஷ்டத்தை நாரதர்க்கப்போது
சாற்றினர் பெற்றோர்களன்புடனே
ஆயுள்ஒருவருடம் சத்தியவந்தனுக்கு
அப்பாலிருக்கமுடியாதென்றார் [கு]

நாரதர் சொன்னமொழிகேட்டு-பெற்றோர்
நலிந்து விசனமடைந்தார்கள்
சிரதாயாசீர்வதித்த நின்வாக்கு
திரும்புமோ நாரதரேபுகல்வீர் [கு]

சத்தியவந்தனைத் தான்தவிரயானுக்
மற்றோர்மணாளனை யான்விரும்பேன்
சத்திய மிதுவேயென்று சாவித்திரி
உத்தமியன்பன் சொலவிவிட்டாள் [கு]

நாரதர்கேட்டு மனந்திகைத்து-அப்போ
நங்கை சாவித்திரிக்குபதேசம்
சீருடனேசெய்த சமயத்திலே
சென்றார்கள்கானகமன்புடனே [கு]

காட்டில்பத்மாக்ஷி துயுமத்சேனனும்
கலங்கியழுதிடுங் கோலமதை
கேட்டுஅஸ்வபதி மாலவியும்
கெஜகேது பாவினைபதித்திந்தான் (கு)

ஐயாசாலவபுரியரசே நாங்கள்
அன்புடன்பெற்றதோர் சாவித்திரியை
வையத்திலுன்மகன் சத்தியவந்தனுக்கு
வதுவைசெய்வதற்கு சம்மதிப்பீர் (கு)

என்றிவர்கள்சொல்ல-துயுமச்சேனனும்
நன்றெனசத்பவந்தனை தானழைத்து
குன்றுதனதுவள் இருவருமாக
குடும்பரக்ஷகராயிருக்க (கு)

மணமதுசெய்திட அஸ்வபதியும்
மாலவியும் தமதேசம்சென்றார்
குணமுடன் சாவித்திரி சத்தியவந்தனும்
கொஞ்சிக்குலாவி மகிழ்ந்திருந்தார் [கு]

அல்லிஅசோகு அழகுசாமந்தி
மல்லிகைமுல்லை மனோரஞ்சிதமும்
சொல்லுதற்கரிய பலவிதமலர்களும்
[illegible]டமனமதை மணமதுவீசவே (கு)

எமதர்மன்-கொலு.

பாபிகளின் குற்றத்தை சித்திராபுத்திரனால் கவனித்து
எமன் தண்டிப்பது.

எமன்-தெம்மாங்கு.

உலகிலுள்ள மனிதர்களில் உண்மையிலேயில்லாத
கலகஞ்செய்தபாவிகளை காலதூதரேவரவழைப்பீர்

அலங்காரம்-அடடா.

சிங்காமுகனே சிறந்தவாயா செங்கண்ணனே சீலாவாடா
எங்குமுள்ள பாவிகளை இழுத்துக்கொண்டுவந்தாயோடா
சித்ராபுத்ரனை தீவிரமழைப்பீர்[தன்

சித்ராபுத்ரன்-தெம்மாங்கு.

பராக்கிரமமுள்ளஎமதருமா பாவிகளிதோவந்தார்கள்
துராத்மாயிவன் கட்குடியன் துரோகியிவன் வேசிநேசன்

அலங்காரம்-ஐபா

கஷ்டப்படுத்தி மனிதர்களை காசுசேர்த்த பொல்லாபாவி
துஷ்டனிவன் சேஷ்டனிவன் துடுக்கனிவன் கொடியதுரோகி

எமன்-அலங்காரம்.

இத்தகைய பாபிகளை இம்சைசெய்து நரகினிலே
சித்ரவதைசெய்திடுவீர் தீவிரமாய்தூதர்களே

அலங்காரம்.

அன்புடைய சித்ராபுத்ர ஆயுள்முடிந்த ஜீவர்களில்
அவரவர்க்குத்தகுந்தவிதமாய் அமைந்ததெண்டனைபுரியசெய்வாய்

எமன்-தெம்மாங்கு.

இன்னுமெவரெவர்கள் இருக்கிறார்ஆயுள்முடிவாய்
பன்னுவாயெந்தனுக்கு பக்ஷமுள்ளசித்ராபுத்ரா (தன்

அலங்காரம்-அடடா

எத்தனைஜீவர்இறந்தவர்கள் எத்தனைபேர்இங்குவந்தவர்கள்
சித்ராபுத்ரா இனிவருவோரே சீக்கிரமாகவே சொல்லுவாய்நீ

சித்ராபுத்ரன்-தெம்மாங்கு.

சாலவபுரியரசன் சமர்த்தில்லா துயுமத்சேனன்
பாலன்சத்தியவந்தனுக்கு பகரும்ஆயுள்முடிவ

அலங்காரம்

இன்றையபகல் சத்தியவந்தன் ஆயுள் எமலோகம்வருகவேணும்
வன்மையுள்ள தூதரையேவி வரவழைத்துகொள்விரையா

தெம்மாங்கு

அப்படியா என்றதட்டி அருகிலிருந்த தூதர்களை
அப்போதே சத்தியவந்தன் ஆவியைக்கொண்டு வருவிரென்றார்

அலங்காரம்

எமனுத்திரவைபெற்று ஏகினார்கள்தூதுவர்கள்
நாமதுந்தார் சாவித்திரிகற்பின் தணலுக்கஞ்சி ஓடிவிட்டார்

தெம்மாங்கு

காலன் பதிக்கன்புடன் கையில்வீணையையேந்தி
சீலகுண நாரதரும் சிங்காரமாய் வந்துவிட்டார்

அலங்காரம் ஐயா

எமனைப்பார்த்து நாரதரும் இதக்கமாகவேசொல்லுகிறார்
சத்தியவந்தனை பிடிக்கவேண்டாம் உத்தமனேஎன்றுரைந்தார்

தெம்மாங்கு

அவனில்வாழ் மாந்தர்கட்கு ஆயுள்முடிந்தபின்பு
தவறுமலையைபுரிக்குத் தாவியேயழைத்துக்கொள்வோம்

அலங்காரம் ஐயா

சத்தியவந்தனுக்காக நீரும் சகாயமாகபோகவேண்டாம்
உத்தமரே உபித்துதியே உமதிருப்பிடமேகுமையே

தெம்மாங்கு

காலனிவ்வாறுரைக்க கஞ்சனிடம்சொல்வோமென்று
சீலகுணநாரதரும் சென்றுவிட்டார்பிர்மலோகம்

அலங்காரம்

நான்முகனைகண்டுநாரதர் நமஸ்கரித்துசொல்லுகிறார்
தேன்மொழிசாவித்ரி கணவன் ஜீவிந்திருந்திடசெய்குவீர்

தெம்மாங்கு

நாரதர்சொன்னமொழி நான்முகனுங்கேட்டுவிட்டு
கூறுவாரச்சமய குற்றமில்லாபிர்மதேவன்

அலங்காரம்

அ[illegible]வர்க்கு விதித்தார்போல் அந்தகனும்செய்வதாலே
[illegible]கிறான் தப்புதற்கோர்மார்க்கமுண்டு

தெம்மாங்கு

கருணாநேசனைப் பற்றிப் காலனிடமனதிருத்தி
தருணமே சத்தியவந்தன் தான்பிழைக்கச்செய்வோமென்றார்

அலங்காரம்-அப்போ

நாரதருஞ் சம்மதித்து நடந்திட்டார் வனத்தைத்தேடி
சிருடனே சத்தியவந்தன் சிந்தைமகிழ்வாயிருந்தான்

தெம்மாங்கு

சாவித்திரி சத்தியவந்தனும் தனியாகவனத்தில்வந்தார்
ஆவிசோரவென்றுமன்னன் அயர்ந்துமே படுத்திட்டானே

அலங்காரம்

எமதர்மன்சத்தியவானை எங்கேநடிக்க உயிரைப்பற்றி
பூமியானைமறக்கவேண்டி புனிதனை மண்செய்துவிட்டான்

தெம்மாங்கு

சத்தியவானுயிரை எமன் தான்பற்றும்வேளையிலே
உத்தமிசாவித்திரியும் ஓங்கியேயழுகலுற்றாள்

அலங்காரம்

சின்னவயதிலென்னை விக்கதிபாய் செப்பலாமோ ஐபாளமனே
அன்னிதமாபெண்புருஷனுவி அன்புடனே தாருமென்றாள்

தெம்மாங்கு

வனம்மா சாவித்திரியே என்னையேன் தொடரலானாய்
கானகத்தில்வரவேண்டாம் கணவனுடலைத்தகனஞ்செய்வாய்

அலங்காரம்

என்றுசொல்லசாவித்திரியும் இணக்கமில்லையென்மனது
என்னையுந்தானழைத்துச்செல்வீர் என்றழுதாள்சாவித்திரியும்

எமன்-தெம்மாங்கு

உன்வார்த்தை நேர்விபுற்ற உருகுதம்மா என்மனது
நன்மையாய்வார்த்தைகேட்பாய் நான்தருவேன் என்றுரைத் [தான்

அலங்காரம்-ஐயா

எனதுமாமன் மாமிகண்கள் தெரியும்படிவரந்தாவென்றாள்
உனதுமனதின்படியேகண்கள் உத்தமியே தெரியும்போவாய்

தெம்பாங்கு

ஆனாலுந்தருமன் ஆருயிரைவிடாமல் ஓடோடியங்கேயோ
போனார்த்தோடிப்பான் பின்தொடர்வேன்

அலங்காரம்-ஐயா

எங்கேபோகீர் எமதருமரே கானநாதனுயிரைதாரும்
என்றுகேட்கஎமன் திகைத்து ஏதேனுமோர்வரம்கேட்பாயென

தெம்மாங்கு

பாவிகளுக்கேது எந்தன்மாமன் மாமிராஜியத்தை
தாவியேபறித்துக்கொண்டார் தரவேணுமெமதுராஜியம்

அலங்காரம் ஐயா

என்றுகேட்கஎமன்மகிழ்ந்து என்றெனவரந்தந்துமறைந்து
சென்றுவிட்டார் சாவித்திரியும் தேடிக்கொண்டுபின்தொடர்ந்தாள்

தெம்மாங்கு

நான்கொடுத்தவரத்தைப்பெற்று நகரைநாடிநடந்திடாமல்
ஏனம்மாசாவித்திரியே எம்பிறகே ஓடிவாருப்

அலங்காரம்-ஐயா

எனது கணவனுயிரைதாரும் என்றுகேட்கஎமன்திகைத்து
இதைதவிர ஓர்வரத்தை கேட்பாய் இப்பமாக தருவேனென்றார்

தெம்மாங்கு.

ஐயாவென்னை பெற்றோர்க்கு ஆண்குழந்தைதருவீரென்று
வையம்புகழ் எமதருமன் மலரடிக்குதெண்டனிட்டாள்

அலங்காரம்-அம்மா

அப்படிக்கே வரங்கொடுத்தேன் அன்புடனே செல்வாயென்று
அக்ஷணமே எமன் மறைந்தார் அத்திசைசாவித்திரிதொடர்ந்து

தெம்மாங்கு.

ஐயனே என்மணாளன் ஆவியைகொடுத்தேதருவீர்
வையமிலேயுமதருளால் வாழ்ந்திருப்போம் தருமதேவா

அலங்காரம்

ஏனம்மா இத்தனைதூரம் என்பின்னே தொடர்ந்துவந்தாய்
வேறேனுமோர்வரத்தை கேட்பாய் இப்போதேதருவேனென்றார்

தெம்மாங்கு

மைந்தன் வரமெந்தனுக்கு தந்திடுவீரென்று கேட்டாள்
சுந்தரியே உந்தனுக்கு மைந்தன்வரந்தந்தேனென்றார்

அலங்காரம்

புத்திரவரத்தைத்தந்தீர் புனிதமோஎன்புருடனையும்
சித்தமகிழ்வாயெழுப்பிநீரும் சீருடனே தருவீரென்றாள்

தெம்மாங்கு

...ப்படியேநல்லதென்று அன்புடனேஎமதருமன்
... சத்தியவந்தனை ஜீவனுடனெழுப்பலானார்

கும்மிச்சிந்து

சாவித்திரியம்மன் பக்தியினால்
சத்தியவந்தனை தானெழுப்பி
ஆயுளுடனே ஜீவித்திருந்திட
ஆண்டவன் கிருபைசெய்தாரே (௪)

இவ்விதமாகவே சதிபதியும்
இன்பமுடனே வாழ்ந்திருக்க
செவ்விழி பெற்றோர்க்கு கண்தெரிந்து
செல்வபெருமைகளை தான்பார்த்து (௫)

மாலவி ஆண்மகவைப்பெற்று
மறுனாள் அஸ்வபதியுடனே
சாலவேகன்றாய் வாழ்ந்திருந்தார்
சந்தோஷமாகவே எப்போதும். [௬]

சாவித்திரியம்மன் சரித்திரத்தை யன்பாயெழுதிவைத்து பூமியில் ஜீவித்திடும் உத்தமர்கள் ஆயுளமட்டும் வாழ்ந்திருப்பார்கள் மங்களம்! மங்களம்! மங்களம்!

முற்றிற்று.

இனி இரண்டாம்பாகம் வெளிவரும்.